
தை - மாசி 2022

# நீங்களும் எழுதலாம்

நீங்கள் -06 எழுத்து -31

31







தடைகளைத் தகர்த்து
தகவுகளைத் தேடி

**இருமாத கவிதை இதழ்**

**NEENKALUM EZHUTHALAM**
**(Poetry Magazine)**

விலை 100/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம் - 31

ஜன - பெப்ர 2022

## ஆசிரியர்

எஸ்.ஆர்.தனபாலசிங்கம்

## படைப்பாளிகள்

அஸ்ரபா நூர்தீன்
க.யோகானந்தன்
சௌ.சந்திரகலா
தம்பிலுவில் ஜெகா
திருமலை சுந்தா
ர.சசிகலா
மருதூர் ஜமால்தீன்
நிலாதமிழின்தாசன்
சி.வினோஜிதன்
பொன் சற்சிவானந்தம்
ஷெல்லிதாசன்
தி.பவித்ரன்
சிங்காரவேல்
லலித்தா
ஏ.சீ.எம்.இப்றாஹிம்
இஸ்மத் பாத்திமா
தெ.கரிதரன்
தமிழேந்திரன்
நல்லை அமிழ்தன்
து.பவரஞ்சினி
சு.சுஜேந்
அகரா
சூசை எட்வேட்
எஸ்.ஆர்.தனபாலசிங்கம்

மூலமும் பெயர்ப்பும் : சி.சிவசேகரம்
கட்டுரை : எம்.பௌசர்
அஞ்சலிக்குறிப்பு
நூல் அறிமுகம்
பதிவு

வடிவமைப்பு - ரோ.சுதர்ஷினி (Google Digital)

தொடர்புகளுக்கு,
ஆசிரியர்,
நீங்களும் எழுதலாம்
43/4, சணல் லேன்,
திருகோணமலை.
e.mail : n.ezhuthalam18@gmail.com
0778812912



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2007

# 'நாடா வளத்த' நாடு இன்று...?

மார்ச் - ஏப்ரல்

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல நாடவளம் தரும் நாடு" என்பர் பொய்யாப் புலவர். தங்கண் வாழ்வார் தேடி வருந்தாமல் இயற்கையிலேயே இயல்பாக செல்வம் உடையதே நாடு. ஆனால் இன்று வளம் குன்றிய நாடுகளும் விஞ்ஞானத் தொழில்நுட்ப வளர்ச்சியால் வளம் பெற்று பொய்யாமொழிப் புலவரை பொய்யாக்கி விட்டன.

நமது நாடோ வள்ளுவத்தின் வரைவிலக்கணத்துக்கமைவானது. பெருந் தொற்றுக்குள்ளான (கோவிட் - 19) பல நாடுகள் தம்மைச் சரிசெய்துவிட்டன. சிலநாடுகள் சரிசெய்து கொண்டு வருகின்றன. ஆனால் நாம்?

"பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும்' என்ற முதுமொழியை மாற்றியமைக்கத் தெரியாமல் நிரூபித்துக்கொண்டிருக்கிறோம்.

எமது தலைமைத்துவங்களும் அதிகார வர்க்கத்தினரும் உயர் பதவிகளில் உள்ளவர்களும் சாதாரண மக்கள் சரியாகச் சிந்திப்பதற்கும் செயற்படுவதற்கும் தூண்டுதலாகவோ முன்னுதாரணமாகவோ இல்லை. தியாகம் செய்வதற்கும் வேண்டாதவற்றைத் தவிர்த்துக் கொள்வதற்கும் தயாராக இல்லை.

உலகின் எங்கோ ஒரு மூலையில் நடக்கின்ற ஒரு பிரச்சினை நம்மை அதிகம் பாதிக்கக்கூடிய சார்ந்த மாறிகளாக உள்ளோம்.

முதலில் நாம் இவற்றிலிருந்து விடுபடுவதற்கான வழி வகைகளைத் தேட வேண்டும். நீண்ட கால பேண்தகு அபிவிருத்தித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டங்களுக்கான கொள்கைகளை வகுக்கவேண்டும். நமக்குள் இருக்கும் பிளவுகளை நீக்குவதற்கு முயலவேண்டும். அவ்வாறான ஓர் அணுகுமுறையே வேண்டற்பாலது.

இல்லையெனில் இதனால் ஏற்படப்போகும் விளைவுகளை சஞ்சீவ பெர்ணாண்டோ கட்டுரை ஒன்றின் வரிகளில் குறிப்பிடுவது பொருத்தம்.

**"நாம் எமது அணுகுமுறையை மாற்றிக்கொள்ளாத வரையில் எம்மிடம் இருப்பதெல்லாம் அந்த '2500 ஆண்டு பழமையான' ஏதோ ஒரு பரீட்சயமான பெரிய பேச்சாகத்தான் இருக்கும். எமக்கு எதிர்காலமே இல்லை. எமது அறியாமையும் தற்திருப்தியும் இயற்கையாகவே முடிவுக்கு வருகின்றன."**

இவ் அவலநிலையை போக்குவதில் கவிஞர்களுக்கு பெரும் பங்குண்டு. 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்பது சிலப்பதிகாரம்.

சங்கப் புறநானூற்றுப் பாடலொன்று போர்க்களத்தில் நிற்கும் மன்னர்களைச் சமரசம் செய்கின்றது. கோவூர்கிழார் எழுதியது.

இரும்பனை வெண்தோடு .....
ஒருவீர் தோற்பினும், தோற்ப
நும்குடியே;
இருவீர் வேறல் இயற்கையும்
அன்றே; அதனால்
குடிப்பொருள் அன்று,
நும்செய்தி ........"

கவித்திறத்தால் நல்லவற்றை இடித்துரைப்பது கவிஞனின் பொறுப்பு.

தடைகளைத் தகர்த்து தகவுகளைத் தேடி
நீங்களும் எழுதலாம்
அன்புடன் ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2021

முதுகெலும்பற்றவருக்கு
செங்கம்பள வரவேற்பு
தேசத்தின் முதுகெலும்பு
தெருவில் அலைகிறது
உரம் இல்லை உணவில்லை
பிள்ளைபோல் பயிர் வளர்த்த
சாகும்பிள்ளை கவலை கொண்டு
தேசத்தின் முதுகெலும்பு
தெருவில் அலைகிறது.

எண்திக்கும் போராட்டம்
போராட்டம் வெல்லுதற்கு
புதியவிதி செய்திடுக
படித்தவர் வீதியிலே
பாமரரும் அதுபோல்
தேசத்தின் முதுகெலும்பு
தெருவில் அலைகிறது

நீதிக்கு நிதி இல்லை என்றார்
வாழ்வுக்கு வழியில்லை ஐயா
சாவெமக்கு வருமுன்னே
வாழ்வதற்கு நீதி
வருமென்ற கனாக்களுக்கு
இளைய புத்திரரே
எழுந்திடுக! தேசம் உயர!
செழித்த நிலம் யாம் பெறவே!

- அஸ்ரபா நூர்தீன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது முகம்

மனிதம் மரித்துப் போன
தெருக்களில்
எனது முகத்தைத் தேடுகின்றேன்...

முந்தியடித்து வந்தனர் பலர்
நிஜமற்ற கூடைகளில்
முகத்தை நிரப்பியபடி....

முன்னே வைத்தனர் ஒவ்வொன்றாய்
கோபக்காரன்
குடும்பத்துக்கு ஆகாதவன்
பொய்யன், பொறாமைக்காரன்
சதிகாரன்
சாதிபார்ப்பவன்
நன்றி கெட்டவன், நயவஞ்சகன்
துரோகி என்றபடி
குவியலாகி குன்றாகி நசித்தது...

சோர்ந்து போன பொழுதொன்றில்
கண்ணாடி முன்நின்றேன்
நான் தொலைக்கப்பட்டிருந்தேன்...

அன்பானவர்களே
ஆண்டவன் எனக்களித்த முகத்தை
என்னிடம் கொடுங்கள்.....

செ.சிங்காரவேல்
கோட்டைக்கல்லாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் கலையும்

என் இளமைக்கால
இனிய நினைவுகளை
நினைவுப் பெட்டகத்தில்
அடைகாத்து வருகிறேன்

உணர்வுக் காட்டில்
கடலின் ஆழத்தில்
தோன்றிவரும்
பேரமைதியாய்

பசுமை உணர்வு கொண்ட
சிற்றிலை நரம்புகளில்
வரைந்து வைத்துள்ளேன்.

இளமைகளின் ஆழத்தில்
புதைந்த கிடக்கும்
இருள் மறைந்து போக
இரவுப் பறவைகளின்
சிறகுகளின் இடுக்கில்
சிக்கித் தவிக்கிறேன்

மௌனம் கலையும்
சிந்தும் பனித்தூறலாய்
விதைகளாய்
சொற்கள் பிறக்கும்

க.யோகானந்தன்
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரங்களும் அமைதியும்

மரங்களின் அமைதி கலைக்க
வீசிய கல்
இலைகளின் வடிவத்திலிருந்தது
சருகுகளின் சலசலப்போடு
ஓய்ந்தது காலம்
யாதேனுமோர் பட்சி உறக்கம்
கலைந்து மேலெழுகையில்
காலம் சரசரக்கும்
மீண்டும் ஓயும்
பனியுறைக்காலம்
அல்லது
மரம்

துளிர்க்கும் எல்லாக் கனவுகளிலும்
காலத்தின் அமைதி
மரத்தின் சமாதியென
உறங்கிக்கொண்டிருக்கையில்
புத்தன்களின் மிச்சத்தை
"உச்சாவாக" கழித்து
துயில் கலைகிறேன்

நிரம்பிய முழுமதியில்
மரத்தின் விம்பம்
தளும்பியபடியிருக்கும் குளம்
எனக்கு கண்ணாடி
மீண்டும் ஒரு கல்லை எறிகிறேன்
குறிதவறிய கல் குளத்தின் மேல் விழ
"கலீர்" சத்தத்துடன் சிதறிய மரத்தின்
விம்பங்கள் திவலைச் சொற்களாக

காலத்தின் உறக்கத்தை
கலைத்த சொற்களின் பிரதியில்
அலையலாய் இலைகளின்
உதிரிகள் அத்தனையிலும்
ஒரு துளி அமைதியுமில்லை
யாவையும் அசைதல்களும்
அலைதல்களுமாய்

-லலித்தா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளை....

அணி நிலம் நடுவில் ஆறு
அரவமாய் வளைந்து செல்ல
மணி நிலம் திருத்தி உழவன் ... நெல்
மணிகளை விதைத்து வைத்தான்.

ஆழி சூழ் உலகத்தவர்க்கு
அடிசில் படைக்க வந்தான்.
மேழி பிடித்து உழுதான்.
மேதினியை வாழ வைத்தான்.

வரப்புயர நீருயர்த்தி —மணி
வயிறார சோறு தந்தான்.
சிறப்புயர்ந்து வாழ்ந்தவன். ... இன்று
சீரிழந்து யாசிப்பதும் ஏனோ?

பருவத்தே பயிரும் செய்தான். ....
யூரியா பசளைக்காய் கரங்கள் விரித்தான்.
தருவித்த உரமும், கிருமி நாசினியும்
தரமற்ற விளைச்சளைத் தந்ததன்றோ?

காலக் கடல் வெளியில் — உழவன்
கனவு நுரையிழந்தான்.
வாழ்தலுக்காய்ப் போராடும் — அவன்
வறுமையை ஒழிப்பவர் யார்?

தூரக் கொள்கையற்ற ஆட்சியிலே
துயர் எல்லையற்ற உழவன்
கூறும் நிஜங்களைக் கேட்டு — புதிய
கொள்கை வகுப்பரோ நாளை..........

திருமதி. சந்திரகலா
சௌந்தரராஜன்

---

**படைப்புக்களில் வரும் கருத்துக்களுக்கு படைப்பாளிகளே பொறுப்பாளிகள். படைப்பை செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவிதி

வறுமையும் செழுமையும்
வாழ்வியல் தலைவிதி
இளமையும் முதுமையும்
இயற்கையின் ஒருவிதி
பிறப்பதும் இறப்பதும்
பிறவியின் நெறிமறை
விதைப்பதும் அறுப்பதும்
விளைச்சலின் அறிகுறி

நன்மையும் தீமையும்
நம்மவர் செயற்களம்
அன்னையும் தந்தையும்
ஆண்டவன் அருட்கொடை
உன்னையும் என்னையும்
உறவுடன் இணைத்தவர்
முன்னையோர் மூத்தவர்
முகமலர்ந் தருளினர்

செல்வமும் செழுமையும்
சீர்பெறும் போதினில்
கல்வியின் அறிவுடன்
கட்டுண்டோர் சிலரதில்
வல்லமை வளம்நிறை
வயல்நிலம் சிறக்கையில்
உள்ளமும் உவந்திட
உவகையால் உயர்ந்தனர்

பணமுடை பாரினில்
பலமுடன் வாழ்ந்தனர்
குணநலம் கொண்டவர்
குறைவிலா வாழ்ந்தனர்
கணம்தானும் களநிலை
கண்டவர் வென்றனர்
உணர்வுகள் உறங்கிட
உளம்களி கொண்டனர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரிடும் களமெலாம்
புயல்அலை விரைந்தன
பொன்நிலம் எங்குமே
பூத்தவை எரிந்தன
ஊரோடு உள்ளவை
உலகெலாம் வளர்ந்திட
சீரோடு வாழ்ந்த நாள்
சிறப்புற நிகழ்ந்தன.

ஏ.சீ.எம்.இப்றாஹிம்,
கிண்ணியா.

## ஆழ்ந்த அஞ்சலிகள்

**முதுபெரும் எழுத்தாளர்**
**செ.கணேசலிங்கன்**

மார்க்சிய வழி நின்று இலக்கியம் படைத்த செ.கணேசலிங்கன் 04.12.2022இல் 93 வயதில் தமிழகத்தில் காலமானார். சே.கணேசலிங்கன் படைப்புக்களாக 63 நாவல்களும் 11 சிறுவர் நாவல்களும் 9 சிறுகதைத் தொகுப்புக்களும் 20 கட்டுரை நூல்களும் வெளிவந்துள்ளன.

இளையோருக்கு மார்க்சிய அறிவை வழங்கும் முகமாக 1978இலிருந்து 1990 வரை 'குமரன்' இதழை நடத்தியதுடன் குமரன் பதிப்பகத்தினூடாக படைப்பாளிகள் பலரது நூல்களையும் வெளிக்கொணர்ந்துள்ளார்.

நீண்ட பயணம், செவ்வானம், மண்ணும் மக்களும், போர்க்கோலம் ஆகிய நாவல்கள் ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் இடதுசாரி எழுத்தாளர்களுக்கு உந்துதலாக அமைந்தவை ஆகும்.

1966ல் இலங்கை சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றார். 1994ல் 'மரணத்தின் நிழலில்' தமிழ்நாடு அரசின் சிறந்த நூலுக்கான விருதைப் பெற்றது. 'குந்தவிக்கு

ம.ப.பா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை ஒன்று கேளுங்கள்

கலைஞர்களை வரவழைத்து
விண்ணப்பம் கொடுத்தார்கள்
விலை செய்து புகழடைந்தோர்
சித்திரம் கதை கவிதை வித்தகரும்

நிகழ்வில் கலந்து கொண்டார்.
ஓரிரு கவி எழுதிவிட்டு
ஒப்பாரி வைத்த சிலர் அங்கே
பெயர் கொடுத்து சென்றார்

முழுநிலவென பிரகாசிக்கும்
மூத்தகவிஞர் பலரும் வந்தனர்
வளுவுள்ள வசனநடைக் கவியோர்க்கு
வந்தது அழைப்பிதழ் கொழும்புக்கு

பாட்டெழுதி புகழ்பெற்ற
குயில்கள் இருக்கையிலே
கோட்டான்கள் சிலதுக்கு
வந்தது விருது.

-தம்பிலுவில் ஜெகா-

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

......செ.க

கடிதம்', குமரனுக்கு கடிதம்', என்பன சிறந்த கடித இலக்கியங்களாகத் திகழ்வன.

எழுத்திலும் பதிப்பிலும் இலங்கைக்கும் தமிழ் நாட்டுக்கும் பாலமாகத் திகழ்ந்த கணேசலிங்கனுக்கு நீங்களும் எழுதலாமின் ஆழ்ந்த அஞ்சலிகள்.

செ.கணேசலிங்கன் மறைவையொட்டிய அஞ்சலி நிகழ்வு நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் 23.12.2022ல் உவர்மலை சமூககற்கை வள நிலையத்தில் இடம்பெற்றது. அஞ்சலி உரையினை கலாநிதி.க.சரவணபவன் ஆற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவே என் சூத்திரம்!

மறவாத நினைவுகள்
நிழலாய் வந்து போகும்!
நீங்காத நினைவுகள்
நெஞ்சை வருடிச் செல்லும்

உண்மையின் பிம்பங்கள்
உள்ளத்தில் ஊசலாடும்!
உணர்வுகளின் உளைச்சல்கள்
உதிரத்தை உறிஞ்சிக்கொள்ளும்!

தியாகம் செய்தவர்கள்
தியானத்தில் திளைத்திருப்பர்!
திட்டம் தீட்டியவர்கள்
வெட்கித்தலை குனிவர்!

காயத்தால் ஆறாத வடு
காலம் கடந்துமிருக்கும்!
வார்த்தைகள் காயத்தை
மிஞ்சிவிடும் அபாயம்!

காறி உமிழவோ
பதிலுக்கு காயம் தந்திடவோ
நான் என்றுமே
உன்னைப் போலில்லை!

மரணிப்போம் எனும் ஞானத்துள்
பயணிப்போம் நாம்!
இதுவே என் சூத்திரம்
இதில் இல்லை விசித்திரம்!

எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா
பஸ்யால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்லையுமாதலால்...

ஆடைகளினை இழந்து
முழு நிர்வாணமாகி

ஜீவாத்மா மாறி
ஆடை மறந்து எந்நாளும்
பரமாத்மாவில் பதிந்து
இதுவும் அதுவுமாகி

வானமாய் வாயுவாய்
நீராய் நெருப்புமாய்
எங்கும் நிறைந்ததாய்
அருவுருவ மற்றதாய்

ஆடையே அணியாத
அற்புத கோலமாகி

இந்தளவு இந்த ஆடை
அருவருப்பானது மட்டுமல்ல
அடிக்கடி நோய் நொடியென்று
தொல்லையுமாதலால்...

திருமலை சுந்தா

---

**கவிதைக்கான**
**பயில்களம்**
**பரிசோதனைக் களம்**
**காத்திரத்தின் களம்**
**கருத்தாடற் களம்**
**விளக்கக் களம்**
**விமர்சனக் களம்**

நீங்களும் எழுதலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுடம் காக்கும் இயற்கை

மரங்களில் உண்டோ? மதங்களும்
மார்க்கமும்
மறங்களைச் செய்யும் மானிட கூட்டமே
மண்ணில் சுயமாய் முளைத்த வளமும்
மலையும் சோலையும் கொழிக்கும் அழகும்

கடலும் காடும் கலையும் மேகமும்
கண்களைக் கவரும் பூமியின் வனப்பும்
ஐம்பெரும் பூதமாய் அகிலம் செழிக்க
ஐயம் இட்டது அனைவரும் வாழவே

முன்னோர் வாழ்வில் முழுதாய் ஆண்டு
முற்றும் எளிதாய் பசுமையில் இணைந்தது
பின்னோர் இன்று சிதைக்கும் அழிவில்
பிதற்றும் செயற்கை முடிவாய் நிலைத்தது

உணவாய் பூசித்து உடையாய்த் தரித்து
உயிரை காக்க வளியைக் கொடுத்தது
உலகை மீட்க உரமாய் அமைவது
உறவைப் பேணும் இயற்கையும் நண்பனே

செல்லும் பாதை நிலையாய் உயர்ந்திட
சேரும் நலத்தின் ஆழம் உணர்ந்திடு
மீளும் வாழ்க்கை சூழும் இயற்கை
மீண்டும் காக்கும் மானுடர் விதியை...

தெ.கரிதரன் (சம்பூர் சமரன்)


## நீங்களும் எழுதலாம்



கவிதையிதழ்
தொகுப்பு
(12 இதழ்கள்)

விலை ரூபா 900.00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிணாம பரிமாணங்கள்

துகள் கொண்ட
தூசிப் படலத்தின்
யூகத்தால் கருக்கட்டப்பட்ட
யுகங்கள் பல கடந்து
தண்ணீரிலிருந்து தரை தாண்டி
குரங்கிலிருந்து பரிணமித்து
சேபியனிலிருந்து ஓர் செழிப்புற்றோம்.

கற்களை உரசிமூட்டி
கல்லாயுதம் கொண்டு வேட்டையாடி
இலைகுழைகளை உடுத்து
குகைகளை கடந்து குடிசையமைத்து
நாடோடியாய் அலைந்து
நீர்வள நாகரிகம் பெற்று
பயிர் செய்து பசியாறி
பண்டமாற்றத்தால் பண்பட்டோம்

நாடுகாண் பயணம் தொடர்ந்து
நாகரிகம் பல கடந்து
நாணயமாற்றம் புகுந்து
மறுமலர்ச்சியால் மலர்ந்து
அண்டம் பிளந்து
ஆய்வு தொடங்கி
கடலும் கண்டமும்
கண்டு வியந்தோம்

வடை சுட்ட பாட்டியை
வாய் பிளந்து பார்த்து நிலவில்
வான் பறந்து பாதம் பதித்து
முட்டைக்கு அடைகாத்தவொருவன்
முழு உலகிற்கும் ஒளி கொடுக்க
விஞ்ஞானமும் மெய்ஞானமும்
புரட்சியும் கிளர்ச்சியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூகம்பமாய் வெடித்து
புத்துணர்வு பெற்றோம்

உலகை சுருக்கி
உள்ளங்கையிலே அடக்கி
முகநூலில் மூழ்கி
முகவரி இழந்து
விழிப்பதிலிருந்து உறங்குவதுவரை
உண்பதிலிருந்து கழிப்பதுவரை
அனைத்தையும் பகிர்ந்து நகர்கிறோம்
பரிணாம பரிமாணங்களாய்....?

திருமதி.சசிகலா ரஜீந்
திருகோணமலை

## கட்டாய பாடங்கள்

மனிதா
ஊறிவரும் நீரிலும்
ஊர்ந்து செல்லும் எறும்பிலும்
எதிரே செல்லும் எருதிலும்
எதிர்த்துச் செல்லும்
ஏறு மீனிலும்
கண்முன்னே சுழலும்
காற்றாடியிலும்
காலடியில் மிதிபட்டு
நிமிரும் புல்லிலும்
கற்றுக்கொண்டே இரு
கடவுள் உனக்கென்று எழுதிவைத்த
கட்டாய பாடங்களை
கச்சிதமாய்
கண்மூடும் வரைக்கும்!

விவேகவெளி தமிழேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கேள்வி

பிணங்களை சுவைப்பதற்காய்
கழுகுகள்
வட்டமிடும் காலம்

எதிர்க்கரங்களை
விலங்கிடுவதற்காய்
தங்கள் கொள்கைகளும்
ஆராய்ச்சிகளும்
கூடுகட்டுகின்றன

இனத்தீயில்
விட்டில்களாய் மாற்றி
மனிதம் கொல்லவெண்ணும்
நகர்வுகள்

அரசியல் பூச்சாண்டிக்குள்
பதவிப் பித்துக்கள்
மூளையைத் தாக்கிட
சிறுபான்மைக் குஞ்சுகளை
இரைகொள்ள எண்ணும்
சொல்லம்புகள்

இலாபங்களேயில்லாத
இனத்துவேஷ நெருப்பில்
குளிர்காய நினைத்து
ஒற்றுமைக் கரங்களை
முறித்திட அலைந்து
மூக்குடைபட்டவர்கள்

வலிகள் சுமைகளாகி
வாழ்வுக்கு ஊடறுத்தே
வயதாகிப்போன
நம் தேசத்தில்
வளரும் மழலைகளின்
எதிர்காலம்
எதனைச் சாதிக்கும்?

மருதூர் ஜமால்தீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடி

பாதங்கள் மறந்த
பாதுகையின்
பயணம்
பாவங்களைச் சுமந்து
பாதைகளை
வதைக்கின்றது

பூதங்கள் காத்த
புதையல்கள்
பூமியில்
பூக்களை மிதித்து
பெட்டகங்களை
சிதைக்கின்றது

கண்களை மூடிய
முகங்களின் முதுசம்
முட்களைக் குவித்து
வண்ணங்களை
விதைக்கின்றது

வயிற்றை வாட்டிய
பசியின்
விரதம்
வறுமையின் கொடியை
உலகில்
ஏற்றுகின்றது

நல்லை அமிழ்தன்

---

அறிமுகக் குறிப்பில் உங்களது கவிதை தொகுப்பு இடம்பெற வேண்டுமாயின் ஒரு பிரதியை அனுப்புங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான்மழையாய் பொழிந்திருப்பாய்

குனியா நெஞ்சக் குணமுடையோன்
குறையாச் சுடராய் ஒளி தருவோன்
அநியாயப் பேய்கள் உன்னை
அழித்தாலும்
அருந்தமிழ் நெஞ்சுள் உறைபவன் நீ

விடியாத் தமிழர் வாழ்வில் திரு
விளக்காய் நித்தமும் நிலைத்தவன் நீ
அடிமை வாழ்வை அகற்றுதற்கோர்
அருந்துணை ஆண்டவன் அருள்வானா...?

கூட இருந்துன் குடி கெடுத்தோர்
குதூகலத்துடனிங்கு உலவுகையில்
பாடும் கவிஞன் என் வாயால் - கவி
பாடமட்டும்தான் முடியும்....

வாடும் மக்கள் உள்ளத்தின்
வாட்டம் களைய எவருமில்லை
பாடும் குயில்களின் இசைத் தெறிப்பில்
பாவலன் எனக்கோ துயர் மணக்கும்

பூத்துள மலர்களில் உன்வதனம்
புன்னகை செய்வதை நான் உணர்வேன்
காற்றாய் உலவும் உன் ஆவி
காக்கும் என்மனம் நம்புதையா....!

ஊற்றாய் உளத்துள் உறைந்திருப்பாய்
உணர்வில் என்றும் நிறைந்திருப்பாய்
மாற்றார் துன்பக் கறை கழுவ
வான் மழையாகப் பொழிந்திருப்பாய்!

நிலா தமிழின்தாசன்
நிலாவெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர் சிவசேகரத்தின் மொத்த கவிதைகளின் முழுத்தொகுப்பின் முக்கியத்துவம்!



பல ஆண்டுகளுக்கு முன்பே செய்யவேண்டிய சில பணிகள் என திட்டமிட்டவற்றில், கவிஞர் சிவசேகரத்தின் முழுக் கவிதைகளையும் தொகுத்து நூலுருவாக்க வேண்டும் என்பது ஒன்று. இப்போது இந்த முக்கிய பணி கைகூடி வந்துள்ளது. மகிழ்ச்சிதான். நமது கலை இலக்கிய, அரசியல், சமூக, பண்பாட்டுத் தளங்களில் பல்லாண்டுகளாக எழுதப்பட்டு, முறையாக தொகுக்கப்படாத பெருமளவிலான எழுத்துகள் இன்னமும் உள்ளன. இவற்றை தொகுத்து ஆவணமாக்குவது காலத்தின் தேவையும் நமது கடமையும் என்ற வகையிலேயே லண்டனைத் தளமாகக் கொண்ட 'சமூக இயல் பதிப்பகம்' தனது பணியைத் தொடங்கியுள்ளது.

எம்.பௌசர்

இந்த ஆண்டின் தொடக்கத்தில் தனது முதல் வெளியீடாக கவிஞர், கலை இலக்கியம் சார்ந்த எழுத்தாளர், கல்வியியலாளர், அரசியல் செயற்பாட்டாளர், விமர்சகர் என பல்வேறு துறைகளில் தனது பங்களிப்பினை தொடர்ச்சியாக ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் ஆற்றிவரும் சிவசேகரத்தின் அனைத்து கவிதைகளையும் உள்ளடக்கிய முழுத்தொகுப்பினை கொண்டுவருவதில் மிக முக்கியமான ஒரு பணியை செய்த நிறைவை நாம் உணர்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவசேகரம் இடதுசாரி கருத்து நிலை கொண்ட நமது முக்கிய பங்களிப்பாளர், 1970களிலேயே இலக்கிய, அரசியல் தளத்தில் தனது எழுத்துக்கள் வழியாக கால் பதித்தவர். கிட்டத்தட்ட 50 வருடங்களாக இவர் எழுதிய 272 கவிதைகளை உள்ளடக்கிய பெருந்தொகுப்பாக (சிவசேகரம் கவிதைகள் 1970 – 2020) இத்தொகுதி உள்ளது. ஐம்பது வருடங்கள் - இது அவருடைய எழுத்தின் காலம் மட்டுமல்ல, கடந்த அரை நூற்றாண்டில் இலங்கைக்குள் நடந்த அரசியல், சமூக நிலைமைகளையும் போக்குகளையும், உலகெல்லாம் ஒடுக்கப்படும் மக்களின் துயரங்களையும் அரசியல் அர்த்தத்துடனும், கவித்துவ செழுமையுடனும் தமிழில் பதிவுசெய்த முக்கிய ஒரு கவிஞரின் முழுத் தொகுப்பு இது என துணிந்து சொல்ல முடியும்.

இனம், மதம், சாதியம், பால்நிலை, பொருளாதாரம், அரசியல், பிராந்திய மேலாதிக்கம் என பல்வகைகளிலும் பல்தளங்களிலும் அரசுகளாலும், அமைப்புக்களாலும், நிறுவனங்களாலும் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அனைத்துவகை ஒடுக்குதலையும், ஒடுக்கப்பட்ட மக்களின் வரலாற்றுத் துயருடனும், அடக்குதலுக்கு எதிரான நியாயமான ,கருத்துக்களுடனும் இத்தொகுதியின் முழு உள்ளடக்கமும் பதிவு பெற்றுள்ளமை முக்கியமானது.

பெருமளவிலான இவரது கவிதைகள் அரசியல் சார்ந்த உள்ளடக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவைதான். இலங்கை அரசியல், சமூக வாழ்வு தொடக்கம் சர்வதேச அரசியல்வரை இவரது கவிதை உள்ளடக்கம் மிகப் பரந்தது, துணிவானது, சமரசமற்றது.

சிவசேகரத்தின் கவிதைகளில் ஒடுக்கப்படும் மக்களுக்கான குரல் என்பதே அடிப்படை உள்ளீடாகும். அதே நேரம் இவரது கவிதைகளின் வழியாக வெளிப்படும் கவித்துவமும் இவரை இலக்கிய உலகில் தவிர்க்க முடியாத ஒரு கவிஞனாக நிலை நிறுத்தியுள்ளது. எனினும் இவரது கவிதைகளைப் பற்றி இதுவரை எழுதியவர்களும் விமர்சித்தவர்களும் சிவசேகரத்தின் அரசியல் கருத்து நிலை பற்றியே பெருமளவு கவனம் செலுத்தியிருக்கிறார்களே தவிர, அவரது கவிதையியல் பற்றியோ அல்லது அரசியலை நுண்ணிய கவிதா உணர்வுடன் அவர் வெளிப்படுத்திய பாங்கைப் பற்றியோ விரிவான எழுத்துக்கள் இன்னும் வரவில்லை.

அங்கதம், கேலி, துயரில் மிதக்கும் சொற்கள், ஆற்றுகைத்தன்மை வாய்ந்த மொழி, இயற்கையோடு இணைந்துவரும் நளினம், அறிவால் நெறிப்படுத்தப்பட்டு வரும் கோபம் என அவரது கவிதையியல் பல்வேறு அழகியல் பரிமாணங்கள் கொண்டன. இப்பொழுது இந்த பெருந்தொகை வழியாக அவரது முழுக் கவிதைகளையும் வாசிக்கும் போது அவரது கவித்துவ ஆற்றலும், முக்கியத்துவமும் மேலும் வெளிச்சம் பெறுவது நிகழும். எதிர்காலத்தில் இவரது 'கவிதையியல் பற்றிய' விரிவான பார்வைகள் வெளிவரும் போது, ஈழத் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத்தின் உள்ளீடு மேலும் ஆழப்படும் என்பது எமது நம்பிக்கையாகும். சிவசேகரம், இலங்கை, தமிழகம், புகலிட நாடுகளில் வெளிவந்த பல்வேறு மாற்று / சிறு சஞ்சிகைகளில் அதிகம் எழுதியவர்.

நவீன தமிழ்க் கவிதை வரலாற்றுடனும், ஈழத் தமிழ் இலக்கிய வாழ்வுடனும் கலந்தும் பிணைந்ததுமான, தவிர்க்க முடியாத ஆளுமை. இவர் லண்டனில் வாழ்ந்த 1984 – 1997ஆம் ஆண்டுகாலம் புகலிட தமிழ் இலக்கியத்தின் மிக முக்கியமான காலகட்டமாகும். புகலிட தமிழ் இலக்கியம் எனும் தமிழின் வீச்சு நிரம்பிய இன்னுமொரு புதிய அத்தியாயம் கால் கொண்டது. இந்தத் தொடக்க காலத்தில் புகலிட நாடுகளிலிருந்து வந்த மிக முக்கியமான சஞ்சிகைகளுக்கு அதிக பங்களித்துள்ளார். புகலிட தமிழ் வாழ்வில், அதன் அரசியலில், அதன் உள்ளடக்கத்தில் ஜனநாயக அடிப்படைகளையும், சமூக சமத்துவத்தினையும் மனித உரிமைகளையும் மதிப்பதற்கும், பேணுவதற்குமான அடிப்படைகளை உறுதியாக வலியுறுத்தியவர். இதற்காக தனது சிந்தனையையும், உழைப்பையும் வழங்கியவர் என்பதை புகலிட தமிழ் இலக்கிய, அரசியல் வரலாற்றை ஆய்வுசெய்ய முன்வருவோர் கண்டுகொள்வர். எம்மைப் பொறுத்தவரையில், ஈழத்தமிழ் இலக்கியத்திற்கும், அதன் விரிந்த பார்வைக்கும், முக்கிய பங்களிப்பினை செய்துள்ளார். அதன் உள்ளடக்கம் சார்ந்து மட்டுமல்ல, அதற்கு ஒரு ஜனநாயக, மனித உரிமைகளை மதிக்கின்ற, உலகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்கப்படுகின்ற மக்களின் துயரங்கள், பாடுகளுடன் தம்மை அடையாளப் படுத்தக்கூடிய ஒரு முகத்தினை வழங்க, அவர் படாதபாடு பட்டிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும்.

இந்த தொகுப்புக்கு முன்னுரை எழுதியுள்ள பேராசிரியர் து.ஃ.மான், சிவசேகரத்தின் அரை நூற்றாண்டுக்கும் மேலான இலக்கிய, அரசியல், எழுத்துக்களையும், அவரது வகிபாகத்தினையும் நேர்மையாகவே மதிப்பிட்டுள்ளார். இறுதியாக, எமது தொடர்ச்சியான இத்தகைய பதிப்பு பணிக்கு இந்த நோக்கத்திற்கு நீங்கள் இரண்டு வகையில் ஆதரவு வழங்க முடியும்.

ஒன்று, பதிப்பகத்தின் ஒரு பங்காளராக நீங்கள் வர முடியும். இரண்டு, எம்மால் பதிப்பிக்கப்படும் நூல்களை வாங்கி ஆதரவு தர முடியும்.

**தனது கல்வித் தொழில் துறைக்கு வெளியே கடந்த ஐம்பது வருடத்திற்கு மேலாக நமது கலை இலக்கியத்துறையில் தன்னை முன்னிலைப்படுத்தாது, எந்தவித பிரதிபலனையோ, விருதுகளையோ கிஞ்சித்தும் கருத்திற்கொள்ளாது "இவை நமது பொறுப்பு" என்ற உணர்வில் சதா செயற்பட்டுக் கொண்டிருக்கும் நம் காலத்தின் ஒரு முக்கிய பங்களிப் பாளனுக்கு, நாம் சொல்லும் நன்றியே இத்தொகுப்பு!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பயில்களம்)

# துணிவுகொள்

மாதவம் செய்த பூமி இது
மங்கையவள் பிறந்ததினால்
மாறிடாத பெருமை கொள்
மாற்றத்தை நீ தொடங்கு.

ஊர் ஒன்று சொல்லும்
உலகொன்று சொல்லும்
ஊன்றிய கால்களை நீயும் - இன்று
பூமியில் புதைக்கத் துணியாதே

துணிந்து பார் பெண்மை என்று
வானை நிமிர்ந்து பார் முடியும் என்று
குனிந்த தலை நிமிராமல் இருந்தது
போதும்
நிமிர்ந்த தலையோடு வெற்றி நடை போடு.

ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை
ஆறுதல் தானடி உன் பெருமை
காற்றுக்கு இங்கில்லை வேலியடி
காட்டாறுதான் இங்கே ஓடுமடி.

ஐந்திணை கொண்ட நிலமிருக்கு
ஆண்டதினால் அது நினைவிருக்கு
ஆயிரம் தலைமுறை உறவிருக்கு
ஆயினும் உனக்கென்றொரு தடமிருக்கு.

துவழாதே துணிந்து நில் - நீயும்
குனியாதே தலை நிமிர்ந்து கொள்
வீழ்ந்தாலும் பின் எழுந்து நில்
வெற்றியின் கொடியை ஏற்றி நில்.

**செல்வி. துரைராசா பவரஞ்சினி**
**(தரம் 13)**
**தி/சாம்பல் தீவு தமிழ் ம.வி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலங்காதே

கலங்காதே மனிதா
மனம் கலங்காதே
சிந்தித்துப்பார் சிந்தும்
ஒவ்வொரு கண்ணீர்த்துளியும்
உனக்கு அறிவுரை கூறும்
உன் வழி சரி என்று
தவறென கூறியவர்களுக்கும்
ஒரு நாள் புரியும் கலங்காதே
உன்னை மற்றவர்களுக்கு
நிரூபிக்க வேண்டிய அவசியம்
உனக்கில்லை
நீ உயர்வதும் உன் மனதில் தான்
நீ தாழ்வதும் உன் மனதில் தான்
உனக்கும் காலம் வரும்
உன் ஒவ்வொரு கண்ணீர்த்துளிக்கும்
காரணமானோர் பதில்
சொல்லத்தான் வேண்டும்.
கலங்காதே.

**சிவகரன் வினோஜிதன்,**
**யா/ஹாட்லிக்கல்லூரி**

# கொரோனா

மண்ணின் மனம்
அது சொன்னது
மனிதர்கள் கனம் என
ஆயுதம் எடுத்தான்
பாதியை அழித்தான்
மீதியை விடத்தான்
வழியில்லா இறைவன்
தானே ஆயுதம் தரித்தான்
கொரோனா எனும்
வைரசாக

க.சஜேந்
யா/ஹாட்லிக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படி என்றால் 22ஐ

விறகு வெட்டும்
சத்தம் வீதிவரை
கேட்குது....

தேவையில்லை என்று
கிடந்த மர கழிவும்..
மனையாளின் கையில்
துண்டு துண்டாகி
சூடேற்றுது...

புகையும் தனது பாட்டிற்கு
புகுந்து விளையாடுது...
கடைத்தெருபோகவே
நெஞ்சு கனக்குது.

நூற்றி ஐம்பதான
மாவு இருநூறானது
இன்னும் ஏறலாம்
என கடை வட்டாரம் கூறுது...

அன்று பயம்
இன்றும் பயம் ஆக...
அன்று உயிர் பயம்
இன்று விலைப்பயம்
மொத்தத்தில் எமக்கு
மிஞ்சியதும் இந்த பயம்தான்...

நேற்று ஓம் என்பது
இன்று இல்லை என்று போகுது...
நாளுக்கு நாள் விலையும் எகிறிப்பாயுது...

இதை எண்ணி விபியும்
ஏற்றமாகுது.... அதனால்
அதற்கும் காசுதான் போகுது...
கடவுளே என்று கை தலைக்கு
மேல் போகுது....
கரண்டும் கட்டாகுது
கனகன வதந்திகள்
காரணமின்றி பரவுது

இப்படி எல்லாம்
வருமென்றிருந்தால்
22 ஏ உன்னை வரவேற்றிருக்க
மாட்டேனே...

தன்னம்பிக்கை
இழந்த மனது இப்படித்தான்
கிடந்து தவிக்குதே.

பொன்.சற்சிவானந்தம்
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனிஷ்ட பாடசாலை

கிப்பித்தலை வெட்டும்
சிரட்டைப் பொட்டும்
கறுத்த பா(b)ட்டாவும்
உஜாலா போட்ட வெள்ளைச் சட்டையும்
பள்ளி நினைவுகளை அள்ளிச் சுமக்கும்

இரட்டை நூல் கொப்பியும்
நடராஜா கொம்பாசும்
முதுகில் தொங்கிட
ஆட்டோக்கடை தேசிப்பழ இனிப்பும்
ஆளுக்கு பாதி கிடைக்கும்

பள்ளிக்கூட வாசலில்
இரும்புக் கேற்றோட
கையில பிரம்போட
செல்வஸ்தான் சேர் நிக்க
அடிவயிறு கலக்கும்

கூட்டிக் கதிரையடுக்கி
தேவாரம் பாடி முடிய
குமுதினி ரீச்சற்ற முதல் பாடம்
"குருவி ஒன்று மரத்திலே கூடு ஒன்றை
கட்டியே" பாட்டோடு தொடங்கும்

நேற்றுப் போட்ட கோபத்துக்கு
நேசம் கேட்டுக் கெஞ்சி
கம்பி மேசைகளுக்குக் கீழே
கைவிரல்கள் நீளும்
கண்ணீரும் நனைக்கும்

பொரிச்ச ரொட்டியும்
இடிச்ச சம்பலும்
இடைவேளையை இதமாக்க
குழாயடித் தண்ணியும்
சிலர் வயிற்றை நிரப்பி
வாயோரம் வடியும்

பேச்சுப் போட்டியும்
நாட்டார் பாடல் நடனமும்
நகைச்சுவை நாடகமும்
மாணவர் மன்றத்தின்
மேடையில் தெறிக்கும்

கடைசி பெல் அடிக்க
பாடசாலை கீதம் பாட
அசையாமல் நிற்க வேண்டும்
அதற்குள்ளும் பல கதைகள்
கண்களால் கதைத்து முடியும்

எல்லோரும் சேர்ந்த சொல்லும்
தை....ங்...கி...யூ...ரீ....ச்சர்....
குட்...பா....பா...ய்..ச்சர்....
சத்தத்தில் காதுகள் கிழியும்

ஐந்தாம் வகுப்பு முடிய
பெரிய பள்ளிக்கூடம் போனதால
அனைவரும் மறந்து போனோம்
பாலூட்டி வளர்த்த தாயை...

அகரா - வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் அறிமுகம்

### வேலணையூர் ரஜீந்தனின்
# பொற்கனவு (கவிதை நூல்)



2017ல் முகநூலில் எழுதத் தொடங்கிய ரஜீந்தன் முகநூல். வானொலி, பத்திரிகை, இணையத்தளம், தொலைக்காட்சி எனப் பல்வகை ஊடகங்களில் எழுதிவருபவர். இவரது முதல் முயற்சியே 'பொற்கனவு' கவிதைத் தொகுதி.

இன்றைய முகப்புத்தகக் கவிஞர்களில் ஒருவராக கவிஞர்களுக்கே உரித்தான சில அடையாளங்களைக் கொண்டு விளங்கும் இவரது கவிதைகளின் பரவலான அறிமுகத்துக்கு முகப் புத்தகம் பெரும் ஆதரவையும் அங்கீகாரத்தையும் வழங்கியிருக்கிறது." என அணிந்துரையில் கவிஞரும், யாழ் மாநகர சபை ஆணையாளருமான த.ஜெயசீலன் குறிப்பிடுவது அவதானிக்கத்தக்கது.

"இறுதியாக ஒரு பதச்சோறாக
ஆசைகளை சங்கிலியில் பூட்டி
இளமைக்குத் தீயிட்டவராய்
ஆயிரம் ஆயிரம்
இளைஞர், யுவதிகள்
ஈழத்தாயின் கண்ணீர் துடைக்கவென
புறப்பட்ட தலைவர்கள்
மண்ணுக்குள் வித்தானார்கள்
இப்போதும் அங்கே கண்ணீர் சிந்தி
கலங்கிக் கொண்டிருப்பார்கள்"

என அமைந்த வரிகள் முடிந்து போன அவலத்தின் ஆதங்கங்களை வெளிப்படுத்துகின்றன. இயற்கை, மனித அவலங்கள், மனித மனப் பண்புகள் என பாடு பொருள்களை விரித்துச் செல்லும் இவர் புதுப்புது உத்திகளையும், நவீன எடுத்துரைப்பு முறைகளைக் கையாள்வதன் மூலமும் எதிர்காலத்தில் இன்னும் சிறந்த படைப்புக்களைத் தருவார் என எதிர்பார்க்கலாம்.

விலை : 300 ரூபா
தொடர்பு : 077704055

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாமரைத்தீவானின் (புதிய) எட்டுத்தொகை.



மரபுக்கவிதைகளும் மரபுக் கவிஞர்களும் மறைந்து செல்கின்ற ஒரு சூழ்நிலையில் எஞ்சியிருக்கும் சிலரில் ஒருவராக விளங்கும் கவிஞர் தாமரைத் தீவான் புதிய புதிய பாடு பொருள்களை இன்றும் மரபிலே தந்து கொண்டிருக்கும் ஒருவராவார்.

மரபை மீள மீள நினைவுறுத்தும் வகையில் பிள்ளைமொழி, ஐம்பாலை ஐம்பது என்றவாறு பெயரிட்டு முப்பது நூல்களை அச்சேற்றியுள்ளார். அச்சேறக் காத்திருக்கும் நூல்களில் எட்டை (புதிய) எட்டுத்தொகை, என்னும் வடிவிலே தந்துள்ளார்.

"நற்றிணை, நல்ல குறுந்தொகை...." என்ற வகையிலமைந்த பாணியில் எட்டுத்தொகையை தாமரைத் தீவான் எடுத்துக்கொண்டார். அந்தந்த நூல்களை அவதானித்தார். வைப்பு முறையினை நோக்கினார். அவற்றின் உட்பொருள் அவரைக் கவர்ந்தது. அதற்கு ஏற்ப அதே முறையில் எட்டு நூல்களை எழுதி சமகால நிகழ்வுகளை தற்காலத்தில் உள்ளோருக்குப் புரியும்படி எழுதியுள்ளார் என அணிந்துரையில் கேணிப்பித்தன் ச.அருளானந்தம் குறிப்பிடுகிறார்.

நல்வரவு, சில்லறை, ப..றுளி, அடுக்கம், பா(க்)கள், உவகை, பாவாரம், முன்மொழி என்பன அத்தலைப்புக்கள்.

மிகவும் இலகுவாக அறுசீர் விருத்தத்தில் எளிய தமிழில், நாலுவரியில் எழுதும் அவரது தனித்துவத்திற்குச் சான்றாக ஒரு பாடல்.

"படித்தவர் பண்பு மிக்கவர்
பல்கலைக் கழகப் பட்டம்
முடித்தவர் திட்டம் இட்டே
முடிப்பவர் அரிய வற்றை"

**வெளியீடு - இரா.செழியன்**
**தொ.பே.இல - 0777381635**
**விலை - 500.00**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படைவாத ஆறாத தொற்றுக்கள்

புனிதத்தை நிலைநிறுத்த
மனிதத்தின்
நிலையறுக்கும்
அடிப்படைவாத ஆறாத தொற்றுக்கள்

"ஆன்மீகம் என்பது
ஆன்மாக்களின்
கருவறுப்பதே" என்பதாக இவர்களது
தத்துவப் பிரகடனங்கள்.

குடிசைபோட்டு
குந்தியிருந்து வாழ்வியல் நடாத்தும்
சாதாரணனை
தெருவில் விரட்டி
தொல்லியல் தொண்டியெடுப்புக்கள் என்ற
சித்து விளையாட்டு சீண்டலின் மூலம்
இதுவெல்லாம் எங்களின் பூமியென
பிரகடனம் செய்து,

இரவோடிரவாக
பளிங்குச் சிலை நிறுவி
அகந்தை நடைபயிலும்
சில சங்கைக்குரியவர்களின்
சங்கைகெட்ட செயல்கள்
ஆயுதமுனைகளின்
அனுசரணைகளுடன்
எங்கும் வியாபித்தபடி...

தன்மானம் காக்கவந்தவர்கள்
கைகட்டி மௌனிகளாய்
தட்டிக்கேட்க திராணியற்றவர்களாய்.

சிலர் சலுகை மழைகளில் நீராடுவதால்
சகலத்திற்கும் தலையாட்டிப்
பொம்மைகளாய்
இமைமூடி நிஷ்டையில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு அஹிம்சை
சகோதரத்துவமென்று
இன்னும் பல அரியதத்துவங்களால்
மானிடனை ஆட்கொள்ளவந்த
போதிமாதவா
உனது மகா சீடர்களென
மார்தட்டி நிற்கும் சில
"காவி" களின் அடாவடிகளிலிருந்து
மானுடத்தை மீட்டெடுக்க
மீண்டும் ஓர் முறை
மிக அவசியமாக
மிக மிக அவசரமாக
அவதாரமெடுக்கவேண்டுமையா
இந்தப் பூமியில் அதுமட்டுமல்ல
ஏனைய அவதார புருஷர்களையும்
ஒன்றிணைத்தபடி
ஏனெனில்
அவர்களது அரிய நோக்கங்களும் கூட
இந்த அடிப்படைவாத விஷக் கிருமிகளால்
கேள்விக்குறியாக!

ஷெல்லிதாசன்

# தெருக்குரல்

எதைப்புதைத்தாலும் மண்ணாகும், மண்ணில்
விதை புதைத்தால் உயிராகும்.

◈◈◈

போதிப்பவனல்ல அதிகம் பேசாது பெரிதும்
சாதிப்பவனே பின்பற்றத் தக்கவன்.

◈◈◈

தீயகுணங்களை மற்றவர்களிடம் காணும்
போதுதான்
தீங்காகத் தெரிகிறது நமக்கு.

◈◈◈

முட்டாள் தன்னை அறிவாளியாய்
நினைப்பதால்தான்
முட்டாளாய் இருக்கிறான் என்றும்.

◈◈◈

ஊனமுற்றவரோடு வாழலாம் அறிவால்
மனதால்
ஈனமானவரோடு வாழ இயலா.

- சூசை எட்வேட்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலின் பாடல்

இருள் எங்களை போர்த்தத் தொடங்கிய
பொழுதில்
சிற்றலைகள் மோதும் கரையொன்றில்
எங்கள் கால்களை புதைத்திருந்தோம்

மெது மெதுவாய்
எங்கள் நேசம் வேரூன்ற
மரத்திலிருந்த
நாரை
தன் துணையின் பிடரியை
கோதத்தொடங்கிற்று

மறைந்து போன சூரியனின்
சூடு இன்னும் குறைவதாயில்லை
ஆனால் அன்று
நிலமும் குளமும் காற்றும் குளிர்ந்தேதான்
இருந்தன

தூரத்தில் ஒளிர்ந்த நட்சத்திரம் தன்னில்
எங்கள் பெயர்களை எழுதியிருந்தது
அப்போது
நான் அவளுக்கு
தேயாத சூரியனை பரிசளித்தேன்
பதிலுக்கு அவள் குளிர்ந்த மழையை
திருப்பித்தந்தாள்
நான்
ஒரு குறிஞ்சிப்பாட்டை பாட
அவள் முல்லைப் பாடலொன்றை
முணுமுணுத்தாள்

காற்றிலெங்கும்
எங்கள் காதலின் கீதம் பரவ
நீண்ட பயணத்தில் பிணைந்த கைகளை
இறுக்கிக்கொண்டு

தோழா
நீ என் மீது கொண்ட அன்பினாழம்
எவ்வளவென்றாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலுக்கு
காலம் தாண்டி
வாழும்
மலைகளையும்
பெரு மரங்களையும்
இந்த பூமியின்
ஆதி ரகசியங்களை அறிந்த
அந்த குளத்தினையும்
எங்கள் பெயர் எழுதப்பட்ட
நட்சத்திரத்தையும்
நிலவு சூரியன்
அதனோடு சேர்த்த வானம்
எல்லாவற்றையும் காட்டிய பின்
மௌனமாயிருந்தேன்

மின்னொளியில்
நாரை தன் துணையை முத்தமிட்டுக்
கொண்டிருந்தது

இருள் எங்களை முழுதாய்
போர்த்தியிருந்தது

எங்கள் கால்கள்
இன்னும் ஆழமாய் தாய் நிலத்தில்
வேரூன்றியிருந்தது.

**தில்லைநாதன் பவித்ரன்**

---

பசுமை : பல்சுவை மாத இதழ்
ஆசிரியர் : ந. பார்த்தீபன்
இதழ் : 5 தை 2022
வெளியீடு : பொய்கை
விலை : 70.00 ரூபா



தொடர்பு
ஆசிரியர் 'பசுமை'
பொய்கை வெளியீடு,
கந்தசாமி கோவில்
வீதி,
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலிபீடம்

நமது நிலம்
நமது புலம்
நமது வளம்
நமது நிலை
நாம் சார்ந்தோர் விலை
அறியாதவர்களாய்
அறியாமை இருளில்

வீங்கினோம்
விரலின் அளவை மறந்து
வாங்கினோம்
வரவின் அளவு கடந்து!

தந்திரக் கூட்டுக்களை
நம்பி நம்பி
நாளடைவில்
நாட்குறித்த
நோயாளிகளாக!

ரோம் பற்றி எரிகையில்
பிடில் வாசித்த
நீரோ மன்னர்களாக
தலைவர்கள்
தத்தம் கேளிக்கை திட்டங்களில்!

இனம் மதம் மொழி பண்பாட்டுக்கு
சொந்தம் கொண்டாடும்
இன்னொரு வகையினர்
முகநூல் போராளிகளாக...!

புனைவுகளுக்கும் உண்மைகளுக்கும்
இடையிலோன
புரிதல் ஏதுமற்று....
கத்தியின்றி இரத்தமின்றி
யுத்தமின்றி
நமக்கான பலிபீடங்களை நாமே
தயார் செய்கின்றோம்.

- எஸ்.ஆர்.தனபாலசிங்கம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம் சிற்றிதழுக்குப் பரிசு

ஞானம் பிரதம ஆசிரியர் தி.ஞானசேகரனின் 80 ஆவது அகவையை முன்னிட்டு கடந்த இருபது (2000 - 2020) வருடங்களில் வெளிவந்த நாவல், சிறுகதை, கவிதை. கட்டுரை. பழந்தமிழ் ஆய்வு. சிற்றிதழ் என ஆறு பிரிவுகளாக நடத்தப்பட்ட போட்டியில் சிற்றிதழ் பிரிவில் நீங்களும் எழுதலாம் ஆறுதல் பரிசைப் பெற்றுக்கொண்டது.

முதலாம் பரிசு - ஜீவநதி
க.பரணீதரன்
இண்டாம் பரிசு - மகுடம்
வி.மைக்கல் கொலின்
மூன்றாம் - படிகள்
எல்.வஸீம் அக்ரம்

ஆறுதல் பரிசுகள் -
நீங்களும் எழுதலாம்
- எஸ்.ஆர்.தனபாலசிங்கம்
ஓசை
- மூதூர் முகைதீன்
மண்
- வைரமுத்து சிவராசா
(ஜேர்மனி)

---

**வங்கி மூலம் வருட சந்தா செலுத்த விரும்புவோர் பின்வரும் வங்கிக் கணக்கிற்கு 450/= செலுத்திப் பற்றுச் சீட்டினை அனுப்பி வைக்கவும்.**

**R.Thanabalasingam**
**A/C No.106653402077**
**Sampath Bank**
**Trincomalee.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூத்த எழுத்தாளர் நந்தினி
சேவியரின் நினைவும் பகிர்வும்
30.10.2021

சாம் டானியல், லலிதகோபன், திருமலை நவம், கௌரிபாலன், ஸ்ரீஞானேஸ்வரன், ஷெல்லிதாசன், பி.ரி அஜீஸ், கோணேஸ்வரன் இன்னும் பலர் உரையாற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமும் பெயர்ப்பும்

## SUICIDE

*Bilquis zafirul hasan*

There are several ways of
committing, suicide.
She may die by consuming poison,
Or by setting herself afire
After dousing kerosene.
By jumping from the seventh floor,
Or by throwing herself before
A running train.
By hanging from a roof or a
ceiling fan,
Or by drowning herself in an
ocean.
There are several ways,
indeed.
Each of them more horrible
than the other – and easy too.
But the most horrible is
to die while living
In this, nobody can notice
That a person is dead.
This is no innovation.
Many have tried this before
me,
And have succeeded.
And the best thing about this
Is that
One takes no chance of being
saved.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தற்கொலை

பில்கிஸ் ZFருல் ஹஸன்

தற்கொலை செய்ய வழிகள்
பலவுண்டு
அவள் அவற்றில் எதையும்
தெரியலாம்.
அவள் நஞ்சுண்டு மரிக்கலாம்.
அல்லது மண்ணெண்ணை தோய்த்த
பின்
தனக்கும் தீ மூட்டி
ஏழாம் மாடியினன்று குதித்து
அல்லது ஓடும் புகையிரமொன்றின்
முன்
தன்னை எகிறி
கூரையினின்றோ
சீலிங் மின்விசிறியினின்றோ தூங்கி
அல்லது பேராழியில் தன்னை
ஆழ்த்தி.

மெய்யாகப், பல வழிகள்
உள.
ஒவ்வொன்றும் மற்றதின் பயங்கரமாய்
எளிதாயுங் கூட.
ஆயினும் அதிபயங்கரமானது
ஏதெனில்
வாழும்போதே மரிப்பது
இதிற் புத்தாக்கமேதுமில்லை
எனக்கு முன் பலர் இதை
முயன்றுளர்
வென்றுமுளர்
அத்தோடு அதன் அதிசிறப்பு
ஏதெனில்
காக்கப்படும் வாய்ப்புக்கு ஒருவர்
இடமளிப்பதில்லை.

- சி.சிவசேகரம் -

ISSN 1800-3311



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org